**ஐ.டி.எண்.3/2024** 06.02.2026

**நி.த.சாட்சி 1 தன்சீர்அகமத் குறுக்கு விசாரணை**

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் எச்.ஆர் துறையில் உதவியாளராக பணிபுரிகிறேன். எனக்கு தொழிலாளர் சட்டங்கள் மற்றும் எங்கள் நிறுவனத்தின் நிலையாணைகள் பற்றி எனக்கு தெரியும். மனுதாரர் ராஜினாமா கடிதம் எதுவும் அளிக்கவில்லை அவராகவே வேலையை விட்டு நின்றுவிட்டார். அவருக்கு வழங்கவேண்டிய பணப்பலன்கள் எதையும் அவர் வேலையை விட்டு நின்றுவிட்டதால் அவருக்கு நாங்கள் அளிக்கவில்லை. என்னுடைய நிருபண வாக்குமூலம் பத்தி எண்.3-ல் 26.04.2023 அன்று மனுதாரர் மன்னிப்பு கடிதம் அளித்ததாக கூறியுள்ளோம் என்றால் சரிதான். மனுதாரருக்கு வேலைக்கு வராததால் காரணம் கோரும் அறிவிப்பு எதுவும் நாங்கள் அளிக்கவில்லை என்றால் சரிதான். 8 நாட்களுக்கு மேல் தொழிலாளி தொடர்ந்து வேலைக்கு வராமல் இருந்தால் அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நிலையாணை விதிகளில் உள்ளது என்றால் சரிதான். மனுதாரருக்கு காரணம் கோரும் அறிவிப்பு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எதுவும் மனுதாரருக்கு எதிராக எடுக்காததால் நாங்களாக தான் அவரை பணியில் இருந்து நீக்கிவிட்டோம் என்றால் சரியல்ல. தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நிர்வாகம் சார்பாக நான் கலந்து கொள்ளவில்லை. நாங்கள் கலந்து கொள்ளாத நோக்கமே தொழிலாளியை அலைக்கழிக்க வேண்டும் என்பது தான் என்றால் சரியல்ல. தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு கூறாத விசயத்தை நீதிமன்றத்தின் முன்பு நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நி.த.சா.ஆ1-ஐ மனுதாரர் அலுவலகத்தில் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டார். அந்த ஆவணத்தை மனுதாரரே தான் கையொப்பமிட்டு கொடுத்தார். மனுதாரரின் கையொப்பத்தை அவரின் கையொப்பம் காணப்படும் மற்ற ஆவணங்களுடன் நாங்கள் ஒப்பிட்டு பார்த்தோம். மனுவில் காணப்படும் மனுதாரரின் கையொப்பமும் நி.த.சா.ஆ1-ல் காணப்படும் கையொப்பமும் ஒன்றாக உள்ளதா என்றால் ஒன்றாக இல்லை. மனுதாரர் மன்னிப்பு கடிதம் கொடுத்த பின்பும் வேலைக்கு வராததால் அவருக்கு நாங்கள் வேலை தரவில்லை. நி.த.சா.ஆ.1 நிர்வாகத்தால் போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. T.A.W Womens College & எதிர்மனுதாரர் நிறுவனமும் ஒரே நபருக்கு சொந்தமானது என்றால் சரிதான்.

எங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் கல்லூரியில் எங்களுக்கு தெரியாமல் மனுதாரர் வேலைக்கு சேர்ந்திருக்க முடியாது என்றால் மனுதாரர் ஏஜென்ஸி மூலம் வேலைக்கு சேர்ந்திருக்கலாம். மனுதாரர் கல்லூரியில் வேலை செய்வது தெரிந்தும் நாங்கள் அவருக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் நிருபண வாக்குமூலத்தில் பத்தி எண்.3-ல் T.A.W Womens College-ன் வருகை பதிவேடு மற்றும் புகைப்பட நகல்களை இணைத்துள்ளதாக கூறியுள்ளேன் ஆனால் அவ்வாறான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் பணிபுரியும் செக்கியூரிட்டி ஏஜென்ஸிக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் இடையே ஒப்பந்தம் உள்ளது. மனுதாரர் மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்தார் என்றும் தானாகவே வேலையை விட்டு நின்றுவிட்டார் என்றும் வேறு ஒரு இடத்தில் பணிபுரிகிறார் என்றும் முன்னுக்கு பின் முரணாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரை 06.01.2022 அன்று பணியில் இருந்து நீக்கிவிட்டோம் என்றும் அதனை மறைப்பதற்காக அவர் வேலையில் இருந்து நின்றுவிட்டார் என்று கூறுகிறோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.02.06 16:47:08 +0530